**செய்தி வெளியீடு எண்: 09/2021** **நாள்: 30.12.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**<u>வருகின்ற ஆங்கிலப் புத்தாண்டு 01.01.2022 முதல்</u>**
**<u>மெட்ரோ இரயில் சேவைகள் இயக்கப்படும் நேரத்தில் மாற்றம்</u>**

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் வருகின்ற 2022, ஜனவரி மாதம் முதல் வார நாட்களில் (திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை) வழக்கம் போல் காலை 5.30 மணி முதல் இரவு 11.00 மணி வரை இயக்கப்படும். மெட்ரோ இரயில் சேவைகள் வழக்கம் போல் நெரிசல்மிகு நேரங்களில் காலை 08.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், மாலை 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையிலும் 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

2022, ஜனவரி மாதம் முதல், மெட்ரோ இரயில் சேவைகள் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளில் வழக்கம் போல் காலை 7:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை 10 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

கடந்த 2021-ஆம் ஆண்டில் அரசு பொது விடுமுறை நாட்களில் காலை 7:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை இயக்கப்பட்டு வந்த மெட்ரோ இரயில் சேவைகள் வருகின்ற 2022, ஜனவரி மாதம் முதல் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டு அனைத்து அரசு பொது விடுமுறை நாட்களில் காலை 05:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை 10 நிமிட இடைவெளியிலும், இரவு 10:00 மணி முதல் 11:00 மணி வரை 15 நிமிட இடைவெளியிலும் இயக்கப்படும்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**